# நம்பிக்கை ஒளி
# Ray of Hope

நம்பிக்கை ஒளி
Ray of Hope

துவண்டோர் துயர் துடைத்து ஒளியேற்றுவோம்

April -2015 FREE NEWSPAPER இதழ்-02



G05, Courtenay House, 10 Courtenay Road, East lane, Business Park, Middlesex, Wembley, HA9 7ND, UK
facebook.com/theroh.org www.theroh.org Email: roh@theroh.org Tel: (0044)2086179343 Mobile: 07853071088




## பாடாசாலை இன்றி அசௌகரியங்களை எதிர்நோக்கும் மாணவர்கள்
## இவ்வருடமாவது எமது கிராமத்துக்கு பள்ளிகூடம் வருமா..?

## ஒருபக்கம் காணிகள் விடுவிப்பும் மறுபக்கம் காணிகள் சுவீகரிப்பும்
## கண்ணீரோடும் விரக்தியோடும் மக்கள்

## எமக்கு எப்போது விடிவுகாலம்?
## ஏக்கங்களுடன் மருதங்குளம் மக்கள்..!

வாழ்வாதாரம் இன்மையால்
கிராமத்திலிருந்து வெளியேறும் கப்பாச்சி மக்கள்

யுத்தம் இருகண்களை காவு வாங்கிவிட்டது.
காலம் கணவனின் நினைவுகளை பறித்துவிட்டது.
முன்நாள் விடுதலைப் போராளியின்
சோகம் நிறைந்த வாழ்க்கை..!

## ஒரே நாளில் 6 மாவட்டங்களில் போராட்டம்
## இப்போராட்டத்துக்காவது தீர்வு எட்டுமா..?


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org







# வாழ்வதற்கு ஏதுவான வசதிகள் இன்மையால் கிராமத்தில் இருந்து வெளியேறும் கப்பாச்சி மக்கள்..!

வாழ்வதற்கு ஏதுவான வசதிகள் எதுவும் இன்றி குடியேற்றப்பட்டுள்ளதாக தெரிவித்து கப்பாச்சி கிராம மக்கள் கிராமத்தில் இருந்து வெளியேறி செல்லும் துர்ப்பாக்கியநிலை ஏற்பட்டுள்ளது.

செட்டிகுளம் பிரதேச செயலகப்பிரிவில் முகத்தான்குளத்தின் குளக்கட்டினை பிரதான வீதியாக கொண்டு அமைந்துள்ள கப்பாச்சி கிராமம் கவனிப்பாரற்ற வாழ்விடமாக மாறிவருகின்றது.

95 குடும்பங்களை கொண்ட இக் கிராம மக்கள் 1977 ஆம் ஆண்டு குடியேறியிருந்த-போதிலும் அக் காலப்பகுதியில் மக்கள் தொகை அதிகரித்ததன் காரணமாக எவ்வித வசதிகளும் இன்றி வாழ்ந்தனர்.

இந் நிலையில் 1990 ஆம் ஆண்டு எற்பட்ட நாட்டில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலை காரணமாக இக் கிராம மக்கள் இடம்பெயர்ந்து மடு பிரே-தசத்திற்கு சென்றிருந்தனர்.

எனினும் மடு பிரதேசத்தில் வசித்துவந்த சில குடும்பத்தினர் இந்தியாவிற்கு அகதிகளாக சென்று விட மிகுதியாக இருந்த சுமார் 40 குடும்பங்கள் மீள தமது கிராமத்தில் குடியேற விரும்பினர்.

இவர்களே முகத்தான்குளத்தை அண்டிய பகுதியில் தாம் குடியேறினால்



நீர் வசதியுடன் வாழலாம் என்ற எண்ணத்துடன் இருந்த சமயம் 1994 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அப் பகுதி பிரதேச செயலாளர் கப்பாச்சி கிராமத்தின் மேட்டுப்பிரதேசத்தில் பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தினை அமைத்து அதனை சூழ மக்களை குடியேற்றுமாறு தெரிவித்து தம்மைக் குடியேற்றயதாக அக் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

அரச அதிகாரிகளின் உத்தரவிற்கமைய அப்பிரதேசத்தில் தாம் குடியேறியபோதிலும் குடிநீர் வசதிகளோ ஏனைய போக்குவரத்து வசதிகளோ இன்றி வாழ்ந்துவந்த நிலையில் 6 குழாய்கிணறுகள் அமைக்கப்பட்டன.

அவற்றில் ஒரு கிணற்று நீரை மாத்திரமே குடிப்பதற்கு பயன்படுத்த முடியும் ஏனையவை குடிநீருக்கு உகந்தது இல்லை.

அதைப் பயன்படுத்தினால் நோய்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாக நீர் பரிசோதகர்கள் தெரிவித்ததால் கிராம மக்கள் குடிநீருக்கு பெரும் அல்லல் படும் நிலை இன்றும் காணப்பட்டு வருகின்றது.

இந் நிலையில் திறந்த கிணறுகளை அமைப்பதென்பது எட்டாக்கனியாகியுள்ள இக் கிராமத்தில் சுமார் 150 அடி ஆழமான ஒரு கிணறு வெட்டப்பட்டுள்ளபோதிலும் அதிலும் கோடை காலத்தில் நீர் இன்றியே காணப்படும் என்கின்றனர் ஊர் வாசிகள்.

இது மாத்திரமின்றி குளக்கட்டினை மாத்திரம் பிரதான வீதியாக கொண்டமைந்த இக் கிராமத்-தில் போக்குவரத்து வசதிகள் ஏதுமின்மையால் பொது மக்கள் சுமார் 3 கிலோ மீற்றர்கள் நடந்தும் துவிச்சக்கரவண்டிகளிலுமே பயணத்தை மேற்கொண்டுவருகின்றனர்.

இருந்த போதிலும் எல்லா மாணவர்களிடமும் துவிச்சக்கர வண்டிகள் இன்மையால் 35 வரையான மாணவர்கள் நடைபவனியாகவே சென்று வெயிலிலும் மழையிலுமாக தமது கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறான நிலையில் இக் கிராம மக்களின் உயிரை காவு கொள்ளும் வகையில்



யானைகளின் நடமாட்டமும் தற்போது இங்கு அதிகரித்துக் காணப்படுவதுடன் மின் கம்பங்களை உடைப்பதும் வீடுகளின் சுவர்களை தள்ளுவதுமாக யானைகளின் அட்டகாசம்



தொடர்வதால் தாம் வாழமுடியாதநிலை ஏற்பட்டுள்ளதாக இக் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந் நிலையில் இக் கிராமத்தின் மக்களின் மீள்குடியேற்றத்திற்கு முக்கிய காரணியாக இருந்த பல நோக்குக் கூட்டறவுச்சங்கம் பல ஆண்டுகளாக மூடப்பட்டு உள்ளமையால் பல நோக்கு கூட்டறவுச்சங்க கட்டிடம் பாழடைந்து கவனிப்பாரற்று காணப்படுகின்றது.
இதனால் இக் கிராம மக்கள் தமது அன்றாட தேவைக்கான பொருட்களை கொள்வனவு செய்வ-தற்கு சுமார் 3 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள முதலியார்குளம் கிராமத்திற்கே செல்லவேண்டியுள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இக் கிராமத்திற்கு கிராமசேவையாளரோ சமுர்த்தி உத்தியோகத்-தரோ வராமையினால் தமது நிலைமைகளைக் கூட அரச அதிகாரிகளுக்கு எடுத்துக் கூற முடியவில்லையென ஆதங்கம் வெளியிடுகின்றனர்.

இதன் காரணமாக இக் கிராம மக்கள் தமது கிராமத்தில் இருந்து மெல்ல மெல்ல வெளியேறி வருகின்றனர்.
வெளியேறியவர்களின் வீடுகள் தற்போது பற்றைகள் மூடி பூச்சி பூராண்களின் இருப்பிடமாக மாறியுள்ளன. அத்துடன்தமது கிராமத்தை அழிவில் இருந்து காக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தவேண்டுமென கோரும் இவர்கள் தமதுசாந்த நிலத்தில் வாழ்வதற்காகவும் தமது வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காகவும் புலம் பெயர்ந்த தமிழ் பேசும் உறவுகளின் உதவியையும் எதிர்பார்த்து நிற்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யுத்தம் கண்களைப் பறித்துவிட்டது. யாரோ எனது கணவனின் ஞாபகங்களை பறித்து விட்டார்கள். கணவனின் ஞாபகம் திரும்பும் என்ற நம்பிக்கையுடன் கணவனை பராமரிக்கும் முன்னாள் விடுதலைப் போராளியின் சோகம் நிறைந்த வாழ்க்கை

ஈழத்தில் வாழும் ஒவ்வொரு தமிழர்களுக்கும் மறக்கமுடியாத கசப்பான வரலாறு இருக்கின்றது. தமிழர்களின் உரிமைக்காக போராடிய எமது உறவு இன்று தனது இரண்டு கண்களையும் பறிகொடுத்து அன்றாட வாழ்க்கை தேவைக்காக ஏக்கங்களுடன் வாழ்வை கழித்துக் கொண்டிருக்கும் ஒரு ஈழத்து பெண்ணின் உள்ளக் குமுறல்கள் நிறைந்த ஒரு நேர்காணல்.




லண்டன் "நபிக்கை ஒளி நிறுவனத்தின் அனுசரணையின் கீழ்.ஈழத்தில் இயங்கி வரும்" இணைக்கும் இதயங்கள்" அறக்கட்டளையின் ஊடாக யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மற்றும் விசேடதேவைக்குட்பட்டவர்களுக்காக மாதாந்தம் மருத்துவக்கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு மருத்துவ உதவி தேவைப்படும் உறவுளின் தற்போதய நிலை தொடர்பாக உலகத்தமிழர்களுக்கும் ஈழத்தமிழர்களுக்கும் எடுத்துக்காட்டும் முகமாக கிளிநொச்சி உதயநகர் பகுதியைச் சேர்ந்த அற்புதானந்தம் ராதிகா, என்ற ஈழத்து பெண்ணுடன் சில நிமிடங்கள்...

வணக்கம் சகோதரி.! என்னுடைய பெயர் ரூபன். நான் நம்பிக்கை ஒளி நிறுவனத்துடன் இணைந்து பணியாற்றுகின்றேன். உங்களுடைய பெயர், இருப்பிடம், பற்றி கூறமுடியுமா?

ராதிகா:- வணக்கம் நான் அற்புதானந்தம் ராதிகா என்னுடைய சொந்த இடம் குறிசுட்டகுளம், கனகராயன்குளம் தற்போது எனது கணவரின் மருத்துவதேவைக்காக கிளிநொச்சி உதயநகர்பகுதியில் உறவினர் வீட்டில் நானும் எனது கணவரும் தங்கியிருக்கின்றோம்.

ரூபன்:- சகோதரி உங்களுடைய கடந்தகால வாழ்க்கை தொடர்பாகவும் நீங்கள் கடந்துவந்த வாழ்க்கை பாதைகள் தொடர்பாகவும் பகிர்ந்து கொள்ள விருப்பம் இருக்கின்றதா?

ராதிகா:- ஆம் எனது கடந்த கால வாழ்க்கை தொடர்பாக சொல்வதற்கு விருப்பம் இருக்கின்றது ஆனால் இதைச் சொன்னால் எனக்கும் எனது கணவருக்கும் ஏதாவது புலனாய்வாளர்களால் விசாரணை ஏதாவது வந்திடுமோ என்ற பயம் இன்னமும் இருக்கின்றது. இருந்தாலும் எனக்கும் எனது கணவருக்கும் இழப்பதற்கு உயிரைவிட ஒன்றும் இல்லை பயந்து பயந்து தினம் தினம் செத்துக் கொண்டிருப்பதை விட எனது கடந்தகால வாழ்க்கையை உறவுகளுடன் பகிர்ந்து சாவதே மேல்.

ரூபன்:- இல்லை, சகோதரி உங்களுடைய பாதுகாப்பு முக்கியம். உங்கள் பாதுகாப்புக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் உங்கள் கருத்துக்களை கூறவேண்டியதில்லை முதலில் உங்கள் பாதுகாப்பு தான் முக்கியம்.

ராதிகா:- இல்லை. இழப்பதற்கு எங்களிடம் இனி எதுவும் இல்லை எங்களுடைய வாழ்க்கையை பற்றி உலகத்தில் இருக்கும் அனைத்து தமிழ் உறவுகளும் தெரிந்துகொள்ளவேண்டும்.

நான் எனது குடும்ப விபரம் சொல்ல விரும்பவில்லை 1981 ஆண்டு குறிசுட்டகுளம், கனகராயன்குளம் பகுதியில் பிறந்தேன் தரம்10ம் வரை கனகராயன் குளம் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்றேன். பின் குடும்ப வறுமை காரணமாக கல்வியை இடைநிறுத்தி வீட்டில் எனது பெற்றோரின் பாதுகாப்பில் வாழ்ந்து வந்தேன்.

நான் பள்ளிக்கூடம் படிக்கும் காலத்திலிருந்தே இயக்கத்தில் சேரவேண்டும். எமது தமிழ் மண்ணுக்காக போராடவேண்டும் என்ற ஆர்வம் எனக்குள் இருந்தது இந்த விருப்பு காரணமாக 1998ம் ஆண்டு மாசி மாத காலப்பகுதியில் இயக்கத்தில் சேர்ந்து எமது ஈழப்போராட்டத்துக்கு என்னால் முடிந்த உதவியை செய்து வந்தேன்.

2001ம் ஆண்டு பளைப்பகுதியில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட சண்டையின்போது எனக்கு பக்கத்தில் பெரிய வெடிச்சத்தம் மட்டும் தான் கேட்டது அதுக்குப் பிறகு என்ன நடந்ததென்றே தெரியாது.

அப்போது மூடிய எனது கண்ணை இதுவரையும் திறக்கவேயில்லை.
எனக்கு பக்கத்தில விழுந்த செல்




எனது இரண்டு கண்களையும் காவு கொண்டுவிட்டது.

எனது உடம்பில் நிறைய பீஸ் துண்டுகளைத் தாங்கி காயப்பட்டு நரகவாழ்க்கை வாழ்ந்து வந்தேன்.

இயக்கம் எனக்கு துணையாக இருந்து மருத்துவ உதவி வழங்கி எனது காயங்களை ஆற்றி குணப்படுத்தினார்கள். ஆனால் கண்களை ஒன்றும் செய்ய முடியாது இருட்டு வாழ்க்கையே வாழ்ந்து வந்தேன்.

தமிழர் பகுதிகளை இராணுவம் பிடித்துக் கொண்டு வரும் போது 2009ம் ஆண்டு மே மாதகாலப்பகுதில் இரண்டு கண்களும் இன்றி என்ன செய்வதென்று அறியாமல் ஓமந்தையில் இராணுவத்திடம் சரணடைந்தேன். அன்றிலிருந்து பூந்தோட்டம் நலன்புரி நிலையம், பம்பைமடு தடுப்புமுகாம், ஆகியவற்றில் ஒரு வருட காலம்வரை அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாது பராமரிப்பும் இன்றி கண்ணீருடன் வாழ்ந்து வந்தேன்.

இதன்போது 2010 ஏப்ரல் மாத காலப்பகுதியில் புனர்வாழ்வு முடிந்து விடுதலை பெற்று எனது பெற்றோருடன் கனகராயன்குளத்தில் உள்ள எனது கிராமத்தில் வாழ்ந்து வந்தேன்.

எனது பெற்றோர் 2012 தை மாதம் அற்புதானந்தம் அருட்பிரகாசம் என்பவருக்கு என்னைத் திருமணம் செய்து வைத்தனர். அதன் பின் நானும் எனது கணவரும் கனகராயன்குளம் கிராமத்திலேயே ஒரு சிறிய தற்காலிக வீடு அமைத்து வாழ்ந்து, வந்தோம். எனது கணவர் மேசன் வேலைக்கு சென்று அதில் வரும் வருமானத்திலேயே குடும்பச் சீவியத்தைப் பார்த்து வந்தோம்.

எனது கணவர் அருட்பிரகாசம் இயக்கத்தில் இருந்து இரண்டு வருடம் புனர்வாழ்வு பெற்று விடுதலையானவர். கடுமையான வேலைகள் செய்யுமளவுக்கு அவரின் உடலும் பலமானதாக இல்லை. ஏனெனில் அவரும் யுத்த சுமையை சுமந்தவர்.

அதனால் மேசன் வேலையை விட்டுவிட்டு கிளிநொச்சியில் தினக்குரல் பத்திரிகையை கடைகளுக்கு போடும் வேலையைச் செய்து வந்தார்.

2015 பெப்ரவரி 21ம் திகதி வழமை போல பத்திரிக்கைகளை சைக்கிளில் கட்டிக்கொண்டு பரந்தனில் இருந்து முள்ளிவாய்க்காலுக்கு சென்றார். அதற்குப் பிறகு சுய நினைவு இன்றி இரத்த காயங்களுடன் முள்ளிவாய்க்கால் பகுதியில் கிடந்ததாக முல்லைத்தீவு வைத்தியசாலையில் இருந்து தொலைபேசி அழைப்பு வந்தது.

அங்கு சென்று பார்த்தால் எனது கணவன் மூச்சுப் பேச்சு எதுவும் இன்றி கிடந்தார். அன்றிலிருந்து இன்று வரை மூச்சுப்பேச்சு இல்லாமல் என்ன நடந்தது என்றும் தெரியாமல் சுய நினைவின்றி இருக்கின்றார்.

இரண்டு கண்களும் பார்வை இல்லாமல் இருக்கும் என்னை பாராமரிப்பதற்கே ஒருவர் தேவையாக இருக்கும் நிலையில், நான் எனது கணவரை பராமரித்து வருகின்றேன் தினமும் மருத்துவத்தேவைக்கு என்னசெய்வதென்று தெரியாமல் எனது கணவன் மீண்டும் பழைய நிலைக்கு வருவார் என்ற நம்பிக்கையுன் வாழ்ந்து வருகின்றேன்.

எனது கணவனின் மருத்துவச் செலவுக்கு உதவி செய்த நம்பிக்கை ஒளி நிறுவனத்துக்கும் மிக்க நன்றி.

ரூபன்:- நன்றி சகோதரி. உங்களை கேள்விகேட்டு தொந்தரவு செய்தமைக்கு என்னை மன்னித்து கொள்ளுங்கள் உங்கள் நிலையை உலகிற்கு வெளிக்கொண்டுவருவதன் மூலம் கருணை உள்ளம் கொண்ட உறவுகள் உங்களுக்கு உதவி செய்வார்கள் என்ற நம்பிக்கையில் உங்களுடைய தகவல்களை பரிமாறிக்கொள்கின்றேன் மீண்டும் நன்றி.

இவ்வாறு தமிழ் மண்ணுக்காக போராடிய குடும்பம் ஒன்று இன்று நிர்க்கதியான நிலையில் இருக்கின்றது இரண்டு கண்களும் பார்வையற்ற ராதிகா சுய நினைவுகளே இல்லாமல் படுத்த படுக்கையில் இருக்கும் அற்புதானந்தம் அருட்பிரகாசம், இவர்களுடைய அடுத்த வேளை உணவுக்கே உறவினர்களை எதிர்பார்க்கும் இவர்களின் தேவைகளை உணர்ந்து உதவிக்கரம் நீட்டுவோம்.

தொகுப்பு கே.ரூபன்

தொடர்புகளுக்கு 02086179343
நம்பிக்கை ஒளி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமக்கு எப்போது விடிவுகாலம்? ஏக்கங்களுடன் மருதங்குளம் மக்கள்..!

யுத்தம் முடிவடைந்து ஆறு வருடங்கள் நிறைவடையும் நிலையிலும் யுத்த பாதிப்புக்களும் அதன் அவலங்களும் இன்னும் மக்கள் வாழ்வியலில் இருந்து அகலவில்லை. ஆட்சி மாற்றத்தின் பின்னாவது தமக்கு நல்லது நடக்கும் என எதிர்பார்த்த மக்கள் அதற்காக தமது வாக்குகளையும் பயன்படுத்தி இருந்தனர்.





மைத்திரி யுகம் ஆரம்பித்து அதன் 100 நாள் வேலைத்திட்டமும் நிறைவடையப் போகிறது. ஆனால் அந்த மக்களின் எதிர்பார்ப்புக்கள் மட்டும் விடை இன்றி இன்றும் தொடர்கிறது.

அத்தகைய ஒரு கிராமமே வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மருதங்குளம் கிராமம்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அமையாரின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற முக்கியத்துவம் மிக்க இராணுவ நடவடிக்கைளில் ஒன்று "ஜயசிக்குறு". இதன் காரணமாக 1997 ஆம் ஆண்டு இவர்கள் இடம்பெயர்ந்தனர்.

இடம்பெயர்ந்த மக்கள் பல்வேறு துன்பங்களையும் துயரங்களயும் தாங்கியவர்களாக யுத்தம் முடிவடைந்த பின் 2010ஆம் ஆண்டு மீள்குடியேற்றப்பட்டனர்.


சொந்த ஊர், மீண்டும் தாம் பிழைத்து விடலாம் என்ற எதிர்பார்ப்புடன் வந்து மீள்குடியேறிய மக்கள் இன்று வரை எந்த அரச உதவிகளும் கிடைக்காத மக்களாக வாழ்வதற்காக கண்ணீர் விடுகின்றனர்.

தமது துயர வாழ்வு தொடர்பாக மருதங்குளம் கிராமத்தைச் சேர்ந்த க.சிவபாலன் இவ்வாறு கூறுகின்றார்.

"ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கையால இடம்பெயர்ந்த நாம் 2010ஆம் ஆண்டு மீள்குடியேறினோம். அப்போது 12 தகரங்களும், 8 சீமெந்து பைக்கற்றுகளும் தந்தாங்க. அதோட எம்மை எல்லா அரச அதிகாரிகளுக்கும் மறந்து போச்சு. நம்ம முயற்சியால தான் தற்போது உயிரோட வாழுறம்" என்கிறார்.

இங்கு 59 குடும்பங்கள் மீள்குடியேற்றப்பட்ட போதும் அவர்களுக்கு அபிவிருத்தி என்ற சொல்லைத் தவிர அதன் பயன் என்னவென்று தெரியாது வாழ்கின்றனர். ஒரு குடும்பத்திற்கு கூட இருக்க ஒரு நிரந்தரமான வீடு கொடுக்கப்படவில்லை.

யுத்தத்தால் பாதிப்படைந்த மக்களுக்கு என பல நாடுகள், நிறுவனங்களின் உதவியுடன் வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட்டன. ஆனால் எமது கிராமத்தையே மறந்துவிட்டனர் என்கின்றனர் அம் மக்கள்.



கொட்டும் மழையில் ஒழுகும் வீடுகளுக்கும் இடிந்து விழும் மண்சுவர்களுக்குள்ளும் வாழும் இவர்கள் கோடை காலத்தில் கூட நின்மதியாக வாழமுடியவில்லை. எரிக்கும் வெயில் நேரடியாகவே உக்கிய கூரைகள் ஊடாக வீட்டை வந்தடைகிறது.

ஜீ.பேபிசகிலா என்ற இப்பகுதி பெண்ணொருவர் கூறுகையில், "நாம இங்க வந்து மீள்குடியேறிய போதும் சொந்தக் காணி என்ற நிம்மதியைத் தவிர வேறு எதுவும் இல்லை. மலசல கூடம் இல்லை. பொம்புள பிள்ளைகள் கூட காட்டுக்கு தான் போறது. அங்க போய் வரக்கு முன் பாம்புகளுடன் போராட்டம். இப்படியே போகுது நம்ம வாழ்ககை.

வீட்டையும் மலசலகூடத்தையும் கட்டித் தந்தால் நாம நிம்மதியாக வாழலாம்" என்கின்றார்.

மலசலகூட வசதியும் இவர்களுக்கு இல்லை. இரவு வேளைகளில் காடுகளுக்கு செல்ல முடியாது இவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். காட்டுப்பகுதிக்குள் இருந்து வரும் யானை, பாம்பு என மிருகங்களுடனேயே போகிறது இவர்களது வாழ்க்கை.

இக்கிராமத்திற்கான ஓர் அடையாளம் போக்குவரத்து பாதை மட்டுமே. ஆனால் அது கூட தற்போது சீராக இல்லை. பாடசாலைக்கு செல்வதென்றால் 3 கிலோமீற்றர் நடந்தே செல்ல வேண்டும். மழை காலங்களிலும் கடும் கோடை காலங்களிலும் வெள்ளை சீருடையுடன் போகும் மாணவர்கள் செந்நிற சட்டையுடனேயே வீடு வந்து சேருகிறார்கள். நம்ம பிள்ளைகளுக்கு ஆசைக்கு கூட பஸ்ஸை காட்ட முடியாது. ஏன் என்றால் நம்ம ஊருக்க பஸ் போக்குவரத்தே இல்லை.

ஒரே ஒரு சின்ன வான் மட்டும் எங்கட கிராமத்திற்கு அண்மித்த பாதையூடாக போகும்.

அதில போய் தான் போகணும். அது எப்ப வரும். எப்போ போகும் என்பது அதன் ரைவருக்கே தெரியுமோ தெரியாது என்கின்றனர் இக் கிராம மக்கள்.



இக்கிராமத்தில் விதவைகள் கூட அதிகமாக இருக்கிறார்கள்.

அவர்களுக்கான சுயதொழில் உதவித் திட்டங்கள் கூட வழங்கப்படவில்லை. ஆனால் நாட்டில் அபிவிருத்தி நடக்குது.

எல்லோரும் சந்தோசமாக இருக்கிறார்கள் என்கின்றனர். எமது கிராமம் இலங்கையில் இல்லையா என்ற சந்தேகம் தான் அரச அதிகாரிகளின் கதையை கேட்டால் வருகிறது என்கின்றனர் விதவைப் பெண்கள்.

இவ்வாறு, அடிப்படை வதிகள் இன்றி தாம் வாழும் துன்ப வாழ்க்கைக்கு மத்தியிலும் 3 கிலோமீற்றர் தூரம் நடத்து வந்து மாற்றத்திற்காகவும் தமது தேவைகளை புதிய அரசாங்கம் என்றாலும் கவனிக்கும் என்ற நம்பிக்கையுடன் வாக்களித்த இம் மக்களுக்கு இந்த அரசு என்ன தீர்வை வழங்கப்போகிறது.? என்பதே கிராம மக்களின் எதிர்பார்ப்பு.

எதிர்பார்த்து எதிர்பார்த்து காலங்கள் கடந்து போய்கொண்டே இருக்கின்றது ஆட்சி மாற்றம் எமது கிராமத்தை மாற்றி அமைக்கும் என்ற நம்பிக்கை போய்விட்டது. புலம் பெயர் எமது உறவுகளாவது எங்களுடைய வாழ்வில் ஒளியேற்றுவார்களா? என்ற ஏக்கத்துடனும், எதிர்பார்ப்புடனும், மருதங்குளம் மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருபக்கம் விடுவிப்பும் மறுபக்கம் சுவீகரிப்பும் காணிகள்

## கண்ணீரோடும் விரக்தியோடும் மக்கள்




யுத்தம் முடிந்து விட்டது. இயல்பு வாழ்க்கை. நாட்டின் எல்லா பகுதிகளிலும் அபிவிருத்தி. மீள்குடியேற்றத்தின் பின் மக்கள் நிம்மதியாக வாழ்கிறார்கள் என அரசாங்கம் கூறுகின்றது. ஆனால் சொந்த நிலம் இருந்தும் அகதி முகாம்களிலும் வாடகை வீடுகளிலும் மற்றவர்களின் நிலங்களிலும் தங்கியிருக்கும் நிலை தொடர்கிறது.
அப்போ அரசாங்கம் சொல்லும் மீள்குடியேற்றம் எங்கே?

இவர்களுக்கு இல்லையா? இவர்களை அது ஏன் சென்றடையவில்லை?
போன்ற பல வினாக்கள் எம்மை தொட்டு செல்கின்றது.

முன்னைய மஹிந்த அரசாங்கத்தின் காலததில் இராணுவத்திற்கான நில அபகரிப்புக்கள் முழு வீச்சில் நடைபெற்றன. யுத்தம் முடிந்த பின்னும் வடக்கு, கிழக்கில் இராணுவ பிரசன்னம் குறையவில்லை.

மாறாக சிவில் நிர்வாகத்தில் இராணுவ தலையீடுகளும் நில அபகரிப்புக்களும் தொடர்ந்தன. மக்கள் அவ்வப் போது ஆர்ப்பாட்டங்களை நடத்தி தமது உள்ளக் குமுறல்களை வெளிப்படுத்திய போதும் அவை வெறும் செய்திகளாகவே போயின.

இவற்றினால் ஏற்பட்ட கடும் வெறுப்பு. ஒட்டு மொத்த தமிழ் மக்களுக்கும் முன்னைய ஜனாதிபதி மஹிந்தவுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுக்க தூண்டியது. மாற்றம் ஏற்பட்டது.

புதிய ஜனாதிபதி, புதிய பிரதமர், புதிய அமைச்சர்கள் என ஏகப்பட்ட மாற்றங்களும்



மக்களை குஷிப்படுத்தும் புதிய அறிக்கைகளும் வெளிவருகிறது. ஆனால் நடைமுறையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதா? என்பதை தேடிப்பார்க்க வேண்டியுள்ளது.

கிழக்கின் சம்பூர் மக்கள், வலி.வடக்கு மக்கள் இன்னும் மீள்குடியேற்றப்பட வில்லை.
அவர்கள் காணி விரைவில் விடப்படும் என அரசு கூறுகிறது. ஆனால் அது சாத்தியப்படுமா என்பது கேள்விக்குறியே.

கடந்த பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன்

வலி.வடக்கு பாதுகாப்பு வலயத்தில் இருந்து 1,000 ஏக்கர் காணியை மூன்று வாரங்களில் விடுவிப்பதாக அறிவித்தார். அது மக்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

இதன் படி N/ 284 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட 233 ஏக்கர் காணியை வளலாய் பகுதிக்கு மக்கள் சென்று பார்ப்பதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

1990 ஆம் ஆண்டு அப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் 25 வருடங்களுக்கு பின் சென்று பார்க்கின்ற போது பற்றைக்காடுகளாக உள்ள அப் பகுதியில் உடைந்த கட்டடங்களும், கட்டடங்களை துளைத்திருந்த குண்டுத் துகள்களும், வெற்று தோட்டாக்களும் போரின் கொடூரத்தை பறைசாற்றும் சாட்சியங்களாக உள்ளது என்கின்றனர் அப் பகுதி மக்கள்.

எல்லைகளையும் பாதைகளையும் கண்டுபிடிக்க முடியாது கண்ணீர்விடும் மக்கள் ஒருபுறம். தமது நிலம் கிடைத்து விட்டது காணியை துப்பரவு செய்வோம் என நிலத்தை சுத்தம் செய்யும் போது வெடிகுண்டுகள் ஏதாவது வெளிக்கிளம்புமா என்ற ஏக்கத்துடன் துப்பரவு செய்யும் மக்கள் என போகிறது இந்த நாட்கள்.

அரசு சொன்ன மூன்று வாரம் நெருங்கும் நிலையில் புதியதொரு தகவலை அரசு வெளியிட்டுள்ளது.

வலி.வடக்கில் விடுவிக்கும் 1,000 ஏக்கரில் முதற்கட்டமாக உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் அமைந்திருந்த வலி.கிழக்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட வளலாய் கிராமத்துக்கு மக்கள் அழைத்துச் செல்லப்பட்டு தமது காணிகளை பார்வையிட அனுமதிக்கப்பட்டனர்.

குறிப்பாக கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட வளலாய் N/284 கிராம அலுவலர் பிரிவில் உள்ள 236 ஏக்கர் காணியில் மக்களை மீளக்குடியமர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றைவிட, குறித்த பகுதியை அண்டிய மேலுமொரு கிராமத்தையும் சேர்த்து 400 ஏக்கர் நிலப்பரப்பில் மக்களை மீளக்குடியமர்த்த அரசு திட்டமிட்டுள்ளது. இந்த நிகழ்வு எதிர்வரும் 23 ஆம் திகதி நடைபெறும். இந்த நிகழ்வுக்கு ஜனாதிபதியும், பிரதமரும் வருகை தருவர். ஏனைய 600 ஏக்கர் காணிகளும் அடுத்த இரு மாதங்களுக்குள் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசு எம்மிடம் உறுதியளித்துள்ளது எனத் தெரிவிக்கிறார் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.
இந்த நிலையில் 400 ஏக்கர் காணி வழங்கப்படவுள்ளது.
மிகுதி காணிகள் 2 மாதங்களுக்கு பின்னர் வழங்கப்படும் என கூறப்படுகிறது. ஆனால் ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதியுடன் பாராளுமன்றத்தின்



பதவிக் காலம் நிறைவடையும் நிலையில் அது கலைக்கப்பட்டு மீண்டும் தேர்தல் நடைபெற வாய்ப்புள்ளது.

இதனால் தற்போது உள்ள அரசியல் நிலமையும் அமைச்சுக்களும் ஏன் பிரதமர் கூட மாறலாம். அவ்வாறான நிலையில் எஞ்சிய 600 ஏக்கர் காணி விடுவிப்பது என்பது சாத்தியப்படுமா என்பது சந்தேகமே.

இவ்வாறு வலி.கிழக்கில் 400 ஏக்கர் காணி விடுவிக்கப்படும் அதேவேளை, மஹிந்த அரசின் காலப்பகுதியில் இடம்பெற்ற இராணுவத்திற்கான காணி சுவீகரிப்பு தொடர்ந்தும் இடம்பெற்று வருகிறது.

1964 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்க காணி சுவீகரிப்பு திருத்தச் சட்டத்தின் பிரகாரம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை என பரவலாக சுவீகரிப்புக்கான நில அளவைகள் இடம்பெறுகின்றது. ஆனால் மக்கள் கடும் எதிர்ப்புக்களை வெளிப்படுத்தி வருகின்றனர்.



தேரும் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# வடபகுதியில் பாரம்பரிய முறையில் அறுவடை

வடபகுதியில் குறிப்பாக வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, ஆகிய பகுதிகளில் பெரும்போக வேளாண்மை அறுவடை காலம் ஆரம்பித்துள்ளது.

இக் காலகட்டத்தில் அறுவடைக்காக நவீன இயந்திரசாதனங்களின் பயன்பாடு அதிகரித்து காணப்படுகிறது. இருப்பினும் வட பகுதியில் இயற்கை வளங்களைப் பயன்படுத்தியும் கூடுதலாக மனித வலுவைப் பயன்படுத்தியும் விவசாயிகள் அறுவடை செய்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

நவீன இயந்திரமயமான இந்த காலப்பகுதியில் மாட்டு வண்டியை பார்ப்பதே அரிதாகிப்போய்விட்டது. இன்றைய தலைமுறையில் பலர் மாட்டு வண்டி என்றால் என்னவென்று தெரியாமலும் இருக்கின்றனர்.

பண்டையகாலத்தில் எமது மூதாதையர்கள் குடும்ப உறவினர்கள் சகிதம் ஆண்களும், பெண்களும் இணைந்து அரிவி வெட்டு பாட்டுப்பாடி சந்தோசமாக நாற்று நட்டு, களைபிடுங்கி, காவல்காத்து, சூடுவைத்து, மாடு அல்லது உழவு இயந்திரத்தை பயன்படுத்தி இரவு பகலாக வியர்வை சிந்தி சூடு அடித்து நெற்களை தூற்றி சாக்கு பையில் போட்டு, மாட்டு வண்டியில் ஏற்றி வீட்டுக்குச் செல்லும் போது இருக்கும் சுகத்திற்கும் சந்தோசத்திற்கும் இணை இவ்வுலகில் வேறு எதிலும் இல்லை.

இருப்பினும் இந்த நவீன காலத்தில் புராதன முறையை பன்படுத்தி அறுவடை செய்யும் விவசாயிகளை பாராட்ட வேண்டிய கடமை சோற்றை உணவாக உட்கொள்ளும் அனைவருக்கும் இருக்கும்.

இக்காலகட்டத்தில் விவசாயிகளின் உழைப்புக்கு ஏற்ற கூலிகள் கிடைப்பதில்லை. இளைஞர்கள் நவீன தொழில்நுட்ப வேலைகளில் அதிகமாக நாட்டம் காட்டி வருகின்றனர். இதனால் விவசாயிகளும், விளைநிலங்களும் அழிக்கப்பட்டு வருகின்ற சந்தர்ப்பத்தில் வடபகுதியில் வறுமைக்காகவும் மனநின்மதிக்காகவுமே தற்போது விவசாயிகள் விவசாயம் செய்து வருகின்றனர்.

விவசாயிகளின் உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கிடைக்குமா? பாரம்பரிய முறையில் நஞ்சு கலக்காத சோறு எமக்கு கிடைக்குமா....? எல்லாமே கேள்விக்குறி தான்...?

இந்த நவீன இயந்திமயமாக்கல் சூழ்நிலையிலும் விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு சிரம்தாழ்த்தி வணங்குவோம்.

# வடக்கு மாகாண விவசாய அமைச்சின் உழவர் பெருவிழா




வடக்கின் பொருளாதாரத்தில் முதுகெலும்பாக விளங்கும் விவசாயத்தில் ஈடுபடும் விவசாயிகளுக்கு மதிப்பளிக்கும் விதமாக வடக்கு மாகாண விவசாய அமைச்சு ஆண்டுதோறும் தைப்பொங்கல் தினத்தையொட்டி உழவர் பெருவிழாவைநடத்தி வருகிறது.

கடந்த வருடம் இவ்விழா கிளிநொச்சியில் இடம்பெற்றதையடுத்து இம்முறை வவுனியாவில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டுள்ளது. ஆரோக்கியமானதும் சூழலுக்கு நட்பானதுமான முறைகளில் வீடுகளிலேயே உணவு உற்பத்தி செய்வதை ஊக்குவிக்கும் நோக்கில் விவசாய அமைச்சால் ஆண்டுதோறும் போட்டிகள் நடத்தப்படுகிறது.

2014ஆம் ஆண்டில் மாவட்ட ரீதியாக வெற்றி ஈட்டிய சிறந்த வீட்டுத்தோட்டச் செய்கையாளர்கள், சிறந்த சேதனப்பயிர்ச் செய்கையாளர்கள், சிறந்த பாற்பசுப் பண்ணையாளர்கள், சிறந்த ஆடு வளர்ப்பாளர்கள் மற்றும் சிறந்த கோழி வளர்ப்பாளர்கள் இவ்விழாவில் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் வடக்கு முதல்வர் க.வி.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகவும், யாழ் பல்கலைக்கழக விவசாய பீடத்தின் தலைவர் கலாநிதி சிவமதி சிவச்சந்திரன், வன்னி மாவட்ட நாடளுமன்ற உறுப்பினர்கள் சிவசக்தி ஆனந்தன், செல்வம் அடைக்கலநாதன், விநோ நோகராதலிங்கம், மாகாணசபை அமைச்சர்கள் த.குருகுலராஜா,ப.சத்தியலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொண்டனர்.


இவ்விழாவில் கலைமாமணி அருந்தவநாயகம் சுஜேந்திராவின் நெறியாள்கையில் வவுனியா நிருத்திய நிகேதன கலாமன்ற மாணவர்களின் நடன நிகழ்ச்சிகளும் அருணா - கேதீஸ் குழுவினரின் நம்தேசக் காற்று என்ற நாட்டார் இசையரங்கும் இடம்பெற்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயக்கச்சி மல்வில் பூங்காவில் நம்பிக்கை ஒளியின் கல்வி உதவித்திட்டம்















லண்டனைத்தளமாகக் கெண்டு இயங்கும் நம்பிக்கை ஒளியின் அனுசரணையில் ஈழத்தில் இயங்கிவரும் இணைக்கும் இதயங்கள் அறக்கட்டளையின் ஊடாக இயக்கச்சி மல்வில் முல்லைப்பூங்கா வீட்டுத்திட்த்தில் 90 பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் கையளிக்கபட்டுள்ளது. யுத்தத்தில் பாதிக்கப்பட்ட முன்பள்ளி மாணவர்கள் முதல் உயர்தரம் கற்கும் மாணர்கள் வரை தெரிவு செய்யப்பட்ட 73 மாணவர்களுக்கும் அவர்களது கற்றல் செயற்பாட்டை ஊக்குவிக்கும் முகமாகவும் அப்பியாசக்கொப்பிகள், புத்தகப்பைகள், பாதணிகள், வழங்கிவைக்கப்பட்டது. இந் நிகழ்வில் இணைக்கும் இதயங்கள் அறக்கட்டளையின் சார்பில் பஞ்சலிங்கம் சுபாஷ்கரன் மற்றும் பஞ்சாட்சரம் கருணேஷ், ஆர்.ஏ அன்ரன்ராஜ், கோ.ரூபகாந் மற்றும் தமிழ்தேசிய கூட்டமைப்பின் இளைஞர் அணி தலைவர் சுரேன், மற்றும் கிராமசேவையாளர் காண்டீபன் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறுவர்களின் வாழ்வில் ஒளி ஏற்றிவைத்தனர்.

**நம்பிக்கை ஒளியின் அனுசரணையில் இணைக்கும் இதயங்கள் அறக்கட்டளையின் அமுல்படுத்தலில் இக்கச்சி மல்வில் பூங்காவில் யுத்தத்தில் பாதிக்கப்பட்ட பெண்கள் தலைமைத்துவ குடும்பங்களில் உள்ள சிறுவர்களுக்கு உதவிக்கரம் கொடுத்த நிகழ்வில் மாணவர்களுக்கான தலைமைத்துவம் மற்றும் உளவளப்பிற்சியும் வழங்கியபோது.**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழரின் வாழ்வோடு பின்னிப்பிணைந்த கற்பகதரு

சென்ற மாத தொடர்ச்சி

பண்டைய தமிழ் எழுத்துக்களுக்கு குற்றிடுவதில்லை. காரணம் ஓலையில் எழுத்தாணியால் குற்றிட்டால் கிழிந்து விடுமென்பதால் குற்றுத் தவிர்க்கப்பட்டதென்பர்.

## கால்நடை உணவு

புல் அருகியுள்ள காலங்களில் பச்சோலை வெட்டிக் கிழித்து மாடு ஆட்டிற்கு உண வாக போடுவர்

## கூரை



ஓட்டுப்பாவனை வரும் முன் இல்லங்கள் பனையோலை, தென்னங் கிடுகு, வைக்கோல் என்பவற்றினால் வேயப்பட்டது.

வெப்ப வலயமான எங்கள் பிரதேசங்களில் இக்கூரைகள் மிகுந்த சுவாத்தியமாக அமைந்த தென்பதை அவற்றில் வாழ்ந்து அனுபவித்தோர் இன்றும் கூறக்கேட்கலாம். பலையோலைக் கூரை அதில் தேர்ந்தோராலே நேர்த்தியாக வேயக் கூடியது.

## வேலியடைத்தல்



அன்றைய கதியால் வேலிகளுக்கு முக மறைப்பாகவும், பாது காப்பாகவும், பனை ஓலையோ, தென்னங் கிடுகோ கொண்டு மறைத்து அடைக்கும் வழக்கம் உண்டு.

இவை செலவு குறைந்தது. கதியாலுக்குப் பதில் பனைமட்டையும் வேலி அடைக்க உபயோகிப்பர்.

## பன்ன வேலை



இது பனையோலை குறிப்பாகக் குருத் தோலை, நார், ஈர்க்கு, மட்டை என்பவற்றைக் கொண்டு வீட்டுக்குத் தேவையான பாவனைப் பொருட்களான பெட்டி, கடகம், சுளகு, பாய், நீற்றுப்பெட்டி, தடுக்கு, குட்டான், ஊமல், தென்னை, வட்டில், விசிறி, தொப்பி, கிலிகிலுப்பை என்பவற்றை இழைப்பதாகும்.

ஈழத்தில் அன்றைய பெண்கள் பங்கேற்கும் முக்கிய குடிசைக் கைத்தொழில் அடுக்குப்பெட்டி. இன்றைய அடுக்கு அலுமினியம், எவர் சில்வர்ச் சட்டிகள் போல், அன்று அடுக்குப் பெட்டிகள் 1/2 முதல் 1 1/2 விட்டம் வரை சுமார் 1/2 உயரத்தில் ஒன்றினுள் ஒன்று வைக்கக் கூடியதாக இழைக்கப்பட்டவை.

ஒரு அடுக்கில் 5 முதல் 10 பெட்டிகள் இருக்கும்பலவித தேவைகளுக்கும் அவற்றின் அளவுக்கேற்ப பயன்படுத்துவர்.

நல்ல இளங்குருத்தோலையில் இழைத்தவை அதிகம் நனைய விடாமலோ, அல்லது காயவிடாமலோ நிழலில் பாவித்தால் 15 வருடங்கள் கூடப் பிய்யாமல் இருப்பவையும் உண்டு.

## ஆஞ்சறைப் பெட்டி

சுமார் 8- 10, நீள அகலமுள்ள சற்சதுரவடிவான பெட்டி, இருஅடுக்கு அமைப்பாக இருக்கும் முதல் அடுக்கு, பெட்டியின் 1/2 வாசி உயரத்துடன் 4 அறைகளாகப் பிரித்திருப்பார்கள். கீழ்த் தட்டு அப்படியே இருக்கும் மேல்தட்டு தனியே எடுத்து கீழ்த்தட்டுள் உள்ளவற்றை எடுக்கலாம்.

அன்றைய நாட்களில் சந்தை வியாபாரிகள் சில்லறைக் காசுக்கு இதைப் பாவித்தனர். சமையலறையிலும், பலசரக்குப் பெட்டியாகவும், ஆயுள் வேத வைத்தியர்கள் மருந்து காவும் பெட்டியாகவும், பாவித்தார்கள். இதை 9 அறையுடனும் இழைப்பர். இன்று காட்சிக்குக் கூட ஒன்று கிடைக்குமோ! தெரியவில்லை.

## கொட்டைப் பெட்டி

இதை வெற்றிலை பாக்கு, புகையிலை பாவிப்பவர்கள். அதைப் பத்திரமாக வைப்பதற்கு உபயோகிப்பர்.

இது ஒன்றினுள் ஒன்றை வைக்கக் கூடிய வகையில் 3 அல்லது 4 தட்டையான அமைப்புடைய வாய்திறந்த அமைப்பில், தனியான மூடியுடன் கூடியது.

இடுப்பில் செருகக் கூடிய தட்டையாகவும், சிறிய அமைப்பிலும் நிறவோலைகளால் அழகிய வேலைப்பாடுகளுடன் இருக்கும்.

## மூடு பெட்டி

சாதாரண பல அளவுப்பெட்டிகளுக்கு பொருத்தமான மூடியும் இழைத்து, மூடியில் பனையீர்க்கால் வசதியாகத் திறந்து மூட கைபிடியும் வைத்திருப்பார்கள்.

## வட்டில்

பழைய காலங்களில் பயணங்களுக்கு, வேலைக்குச் செல்வோர் சாப்பாடு எடுத்துச் செல்ல பாவித்த சிறிய மூடியுடன் கூடிய பெட்டி. நல்ல இளங்குருத்தோலையில் மிக நெருக்கமாக இழைத்தது. இலகுவில் இறுக்கம் குறைந்த கறிகள் வெளியேறாது. கழுவிக் கழுவிப் பல காலம் பாவிப்பர்.

## சுளகு

பனையீர்க்காலும், மட்டையாலும் பின்னுவது. அரைச் செவ்வக வடிவில் புடைப்பதற்கும், வட்ட வடிவில் உணவுப் பொருட்களைக் காய வைப்பதற்கும் பல அளவுகளில்



பனையோலை நார் கொண்டு இழைப்பது, சாதாரண பனை ஓலைப் பெட்டிக்கும் கடகத்துக்கும் உள்ள வித்தியாசம் கடகத்துக்கு வெளிப் பாகம் நாரால் இழைத்து வாய்ப் பகுதிக்கு பலத்திற்காக தடிப்பான நார் பொருத்தியிருப்பார்கள்.

## கடகம்



பாவனையிலும் கடகத்தின் உபயோகத்துக்கு சாதாரண பெட்டியைப் பாவித்தால் பிய்ந்து விடும். உமி - மண், கல் அள்ளுதல்.

சும்மாடு என்பது பாரமான பொருட்களைத் தலையில் காவும் போது அழுத்தாமல் மென்மையாக இருக்க பழைய துணி, சால்வை, முந்தானைச் சேலை போன்றவற்றால் உடன் செய்வது. அதாவது வட்டவடிவமாக ஒரு சாண் விட்ட அளவில் சுருட்டுவது.


இதை துணிவகையிலேயே செய்வர். தலைக்கு மெத்தென இருப்பதே நோக்கமும் தேவையும் .பட்டை, இளங்குருத்தோலையில் செய்வர். இது தோட்டத்து இளங்கன்றுகளுக்கு உய்தண்ணீர் ஊற்றவும். கிணற்றில் இருந்து நீர் அள்ளவும் பாவிப்பர். சுமார் 1 கலன் கொள்ளக் கூடியவையும் செய்வர்.

## திருகணை

கழிவு ஈர்க்கை ஒரு சாண் விட்டமுள்ள வட்டமாகச் சுற்றி, அதற்கு முறுக்கிய ஈர்க்கால், மேற்சுற்றுச் சுற்றுவர். பனை, சட்டி, குடம் உருளாமல் இருக்க உபயோகிப்பர்.

## உறி

திருகணைக்கு 3, 4 ஈர்க்கில் பின்னிய சுமார் 3 மீற்றர் நீளமான தொடுப்பு (கயிறு போல்) தொங்கும்



படி அமைத்து சாப்பாட்டுப் பொருட்களை பூனை, நாயிடமிருந்து பாதுகாக்கப் பாவித்தார்கள்.

## உமல்



பலையோலையில் இழைப்பது. இன்றைய பசுமதி அரிசிப்பை போல் இருக்கும்.

அன்று பொருள் காவப் பாவித்தார்கள்.

## பிளா



உடன் தேவைக்குப் பச்சையோலையிலும் பல காலப் பாவனைக்கு குருத்தோலையிலும் அரை முட்டைவடிவில் அமைப்பது.

கிராமக் கோவில்களில் சித்திரைக் கஞ்சிக்கும் வயல் வேலை செய்யும் போது சாப்பிடவும் பாவிப்பர்.

சுடு சாப்பாடு பச்சையோலையை வேகவைக்கும் போது வரும் வாசமே! அருமையாக இருக்கும். குருத்தோலைப் பிளா கள்ளுத் தவறணைகளில் வைத்திருப்பர்.

## தென்னை

பனையோலையில் உடன் பாவனைக்கு இழைக்கப்படும் சிறு பெட்டிகள் வழிபாடுகளுக்குப் பாவிப்பது. இந்தோனேசியா,தாய்லாந்து, கம்போடியா போன்ற நாடுகளிலும் வழிபாட்டில் இத் தென்னைகள் முக்கிய இடம் வருக்கின்றன.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துட்டுவாகை கிராமத்தில் பாடசாலை இன்றி அசௌகரியங்களை எதிர்நோக்கும் மாணவர்கள்

கடந்த யுத்த சூழ்நிலையில் தம்பனைக்குளம், பெரியதம்பனை, மற்றும் கந்தசாமிநகர் ஆகிய பகுதிகளில் வசித்துவந்தவர்கள் இடம் பெயர்ந்து




பல்வேறு நலன்புரி நிலையங்களிலும் உறவினர் வீடுகளிலும் வசித்துவந்தனர்.

இவர்களுள் 110 குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு அரை ஏக்கர் காணி வீதம் வழங்கப்பட்டு குடியேற்றப்பட்ட கிராமமே இந்த துட்டுவாகை கிராமம்.

வவுனியா வெங்கலச் செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவில் அமைந்துள்ளது.

இக்கிராமத்திலிருந்து சுமார் 200 க்கும் மேற்பட்ட மாணவர்கள் முதலியாகுளம் பாடசாலை, மற்றும் அடைக்கல அன்னை வித்தியாலயம், மாங்குளம் அல்காமியா முஸ்லிம் வித்தியாலயம், நேரியகுளம் போன்ற பாடசாலைகளுக்கு சுமார் 4 தொடக்கம் ஏழு கிலோமீற்றர் தூரம்வரை நடந்து சென்றே கல்விகற்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

1996ம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து இன்றுவரை இக்கிராமத்துக்கென்று தனியாக பாடசாலைகள் எதுவும் அமைக்கப்படவில்லை குறித்த கிராமத்தில் வசிக்கும் மாணவர்கள் மதவாச்சியையும் மன்னாரையும் இணைக்கும் வாகன நடமாட்டம் அதிகம் காணப்படுகின்ற அபாயகரமான வீதியை பயன்படுத்தியே பாடசாலைக்குச் சென்று வருகின்றனர்.

இதன் காரணமாக கடந்த சில மாதங்களுக்கு முன் தரம்10 இல் கல்விகற்ற மாணவியொருவர் பேருந்தில் மோதி உயிரிழந்த சம்பவம் ஒன்று நடைபெற்றதும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறு பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கும் மாணவர்கள் தமது கிராமத்தில் ஒரு ஆரம்ப பாடசாலையை அமைத்துத் தரும்படி பல தடவைகள் பல்வேறு தரப்பினருக்கும் கோரிக்கை விடுத்தும் இதுவரை தீர்வு எதுவும் எட்டப்படவில்லை.



இந் நிலையில் செட்டிகுளம் கோட்டக்கல்வி அதிகாரி எஸ்.ஜேசுதாசன் அவர்களின் வேண்டுகோளுக்கு அமைவாக குறித்த கிராமத்தில் ஆரம்ப பாடசாலை அமைப்பதற்காக வெங்கலச் செட்டிகுளம் பிரதேச செயலகத்தினால் இரண்டு ஏக்கர் பரப்பளவை உடைய காணி வழங்கப்பட்டுள்ளது.


இருப்பினும் ஆரம்ப பாடசாலையை அமைப்பதற்குரிய நிதி ஒதுக்கீடு இன்னமும் கிடைக்காததன்



காரணத்தினால் இந்த பாடசாலை அமைப்பதில் தாமதமாகி வருவதாக இக் கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அத்துடன் தற்காலிகமாக பாடசாலை அமைப்பதற்கு அரசசார்பற்ற நிறுவனங்களிடமும் கோரிக்கை விடுத்துள்ளனர். இப்பகுதியில் இருக்கும் மாணவர்களின் கல்விக்கு எப்போது தீர்வு கிடைக்கும் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.??

இவர்களின் கல்வி தேவைக்கு தமக்கென 100x20 அளவு கொண்ட தற்காலிக ஒரு பாடசாலை கட்டடம் மட்டுமே தேவை என்கின்றனர் எமது நாளைய தலைமுறையினரின் கல்வி செயற்பாட்டை ஊக்குவிக்க நம்பிக்கை ஒளி நிறுவனத்துடன் தொடர்புகளை மேற்கொள்ளுங்கள்.





04ஆம் பக்கத் தொடர்ச்சி

இதன் உச்சமாக கடந்த 17 ஆம் திகதி முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திற்கு முன்பாக இருந்த 40 குடும்பங்களுக்கு சொந்தமான 20 ஏக்கர் காணியை 682 ஆவது படைப்பிரிவு கையப்படுத்துவதற்கு அளவீடு செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. இதையறிந்து அங்கு ஒன்று கூடிய மக்கள் காணி சுவீகரிப்பு உத்தியோகத்தரை இராணுவ முகாமுக்குள் ஓட வைக்கும் அளவுக்கு விரட்டி அடித்ததுடன் அதனைத் தொடர்ந்து பிரதேச செயலகம் மற்றும் 682 ஆவது படையணியின் தலைமையகம் என்பவற்றையும் முற்றுகையிட்டு தமது ஆதங்கத்தை கொட்டித் தீர்த்தனர்.

இதே போன்று, வவுனியா, நொச்சிமோட்டை ஏ9 வீதியில் உள்ள பேயாடிகூழாங்குளம் பகுதியில் 12 பேருக்கு சொந்தமான காணிகளையும் மற்றும் சிறிமுருகன் இந்து சபை ஆரம்ப பாடசாலைக்கு சொந்தமான காணியையும் உள்ளடக்கி 30 ஏக்கர் காணியை சுவீகரிக்க நிலஅளவீடு செய்யப்பட்டது. தமது காணிகளை அடையாளம் காட்டுவதற்கு காணி உரிமையாளர்களை 17 ஆம் திகதி காலை வருமாறு கடிதம் அனுப்பி இருந்தனர்.

ஆனால் 3 பேர் மாத்திரமே சென்றனர். ஏனையோர் அங்கு செல்லவில்லை. ஆனால் அளவீடு நடைபெற்றது.

ஆக மொத்தத்தில் ஒரு பக்கம் காணி விடுவிப்பு மறுபக்கம் காணி சுவீகரிப்பு என தொடர்கிறது மைத்திரியுகத்தின் 100 நாள் வேலைகள். மாற்றம் வரும் என நம்பிக்கையோடு வாக்களித்தனர் மக்கள். ஆனால் மக்களுக்கு ஏமாற்றமே தொடர்கிறது என்பதே உண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய சங்கமம்

இன்பம் தருவது. மக்கள் வாழ்வினை திருத்தி அமைப்பது. இந்த வகையில் உலகம் உய்யும் வண்ணம் தமிழுக்கும் சமயத்துக்கும் தொண்டாற்றி இறவாப் புகழ் கொண்டவர்கள் வாழ்க்கை வரலாற்றை இலக்கிய சங்கமத் துறைசார்ந்த அறிஞர்கள் புடைசூழ தமிழ்ப்பணி விழாவாக கொண்டாடி வருவது யாவரும் அறிந்ததே.




இளைஞர்கள் முதல் பெரியவர்கள் வரை பயனுள்ள வகையில் தமிழோடு தம் வாழ்வை இணைத்து தம் இலட்சியத்தில் ஈடேற்றம் கண்ட அறிஞர் பெருமக்களின் வாழ்க்கை வரலாற்றை மீள் பார்வை செய்யும் தமிழ்ப் பணிவிழா வரிசையில் நவாலியூர் தங்கத்தாத்தா சோமசுந்தரப்புலவர் வாழ்க்கை வரலாற்றை 21.02.15 சனிக்கிழமை மாலை Wembley Alperton St.Jemes மண்டபத்தில் மிகச் சிறப்பாக இலக்கிய சங்கமம் கொண்டாடப்பட்டது.

வழமைபோல் மங்கள விளக்கேற்றல், திருமுறை உணர்த்தும் அறநெறியென்று சைவமுன்னேற்றச் சங்க அமைப்பாளர் திரு.ல.இ இராமநாதன் அவர்களின் நினைவுப் பேருரை ஆரம்பமானது. புலவர் பாரம்பரியத்தின் கொடுமுடி என்று புலவர் க.சிவானந்தன் அவர்களும் தாடித் தமிழ் என்று இளையதம்பி தயானந்தா அவர்களும் ஏறாத மேட்டுக்கு இரண்டு துலா என்று பரிஸ்ட்டர் யோசப் அவர்களும் உரை நிகழ்த்தினர்.

ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை என்ற பாடலையும் தங்கத்-தாத்தா முதன் முதல் பாடிய மூத்தண்ணா என்ற விநாயகர் துதியையும், அஞ்சு முகத்தவர் கொஞ்சி முகந்திடும் ஆறுமுகப் பதுமம் என்ற முருகன் பாடலையும் சங்கீத பூசணம் சற்குணராஜன் இசைக்கு இலக்கியச்சபை பேரானந்தத்தில் தினமும் திழைத்திருந்தது.

அதனைத் தொடர்ந்து சிறப்பு பேச்சாளராக சட்டத்தரணி காயத்திரிதேவி, கதிர்காமநாதன் நாழிகை ஆசிரியர் திரு மாலி அவர்கள் விசேட உரையை வழங்கினார்கள். இளைஞர் இலக்கிய சங்கமத்தின் குரலாக செல்வன் பரந்தாமன் குரல் ஒலித்தது. அது பலரின் எண்ணத்தையும் ஈர்த்தது.

மன்றத்தின் காப்பாளர் திரு சிவானந்தன் வரவேற்புரை வளங்கிக உயர் வாசர் குன்று முருகன் சிவாச்சாரியார் குகேந்திரக் குருக்கள் ஆசிவழங்க அறங்காவலர் தேவசகாயம் அவர்கள் வாழ்த்துரையும் பண்ணிசைப் பாடகர் பரமசிவத்தின் திருமுறைப்பாடலும் சங்கத்தின் செயலாளர் திரு ஒப்பிலாமணியின் நன்றியுரையும் இரவு விருந்து உபசாரத்துடன் நிகழ்வு பூரண நிறைவடையச் செய்தன.


இவ் விழாவில் முக்கிய அம்சம் துறைபோன பேச்சாளப் பெருமக்கள் அனைவரின் பேச்சை வியவாத சபையினர் கிடையாது. பேச்சுக்கள் உக்கிரமாய் கலைஞர்களை காந்தமென இழுத்திருந்தது.

சோமசுந்தரப்புலவர் அவர்களை ஈழத்து கவிஞர் என்ற பிராந்தியத்துக்குள் அடக்கிவிட முடியாது. பரந்த தமிழ்க்கவிதை உலகின் தலைமைக் கவிஞர்களில் ஒருவராக விளங்குபவர் என்றும் வங்கம் தந்த தாகூரையும் ஈழம் தந்த தங்கத்தாத்தாவையும் இணைத்து உரையாற்றினார்கள். தமிழ் நாட்டில் தங்கத்தாத்தாவின் கவிதைக்கு இருந்த இரசனை மதிப்பீட்டினை நாழிகை ஆசிரியர் விளக்கினார்.

சோமசுந்தரப்புலவர் செய்த சமூகச்சீர்திருத்தம் முக்கிய பாகுபொருளாக அமைந்தது. ஆடுகதறி அழுததை நினைவு கூர்ந்து மக்கள் புலால் உண்பதனை விடுத்து சைவர்களாக மாறியதை ஒலிவாங்கி இன்றி தன் அகோரக் குரலினால் பரிஸ்டர் யோசப் அவர்கள் விளங்கினார். கத்தரி தோட்டத்தில் மத்தியில் நின்று சேவைபுரியும் சேவகன், ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை, இலங்கை வளத்தின் மகிமை என்பன பெருமக்களால் அக்கு வேறாக ஆராயப்பட்டன. நல்லை நகர் தந்த உரைநடையான் ஆறுமுக நாவலர் மீதும் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் மீதும் தங்கத்தாத்தா கொண்டிருந்த மதிப்பும் நெகிழ்வும் அலசப்பட்டன. அனைத்தும் கட்டுரைக்குள் அடக்கமுடியாது.

இந்த விழாவின் முக்கிய சிறப்பு அம்சம் அப்பன் மகனாகிய வளர்ந்து உயிர் ஓய்தல் அற்று உயர்வு ஒன்றினை நாடலே உண்மை. என்னும் வகையில் விழாவின் இடையில் சோமசுந்தரப் புலவனாரின் பேரன் டாக்டர் பாரதி இளமுருகனார் பாடி, பேசி, ஒஸ்ரேலியாவில் இருந்து அனுப்பிவைத்த வாழ்த்துச் செய்தி காட்சிப்படுத்தப்பட்டது.

செல்வி இராணி சிறினிவாசம். அதனை நெறிப்படுத்தினார் டாக்டர் பாரதியின் மற்றுமொரு செய்தியை சுமங்கலி தர்மேந்திரனும் கவிஞர் சுபதினி பாணுகோபனும் வளங்க இலக்கிய சபையோர் பெரு வியப்பில் ஆழ்ந்தனர். அத்துடன் திரு பொன் பாலசுந்தரம் அனுப்பிவைத்த வாழ்த்துப் பாடலை சற்குணராயன் இசையுடன் வழங்கினார். யாம்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற உணர்வு பொங்க தங்கத்தாத்தா நிகழ்வு நிறைவு கண்டது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் போனோரின் உறவுகள் வடக்கு, கிழக்கில் ஒன்றிணைது ஒரே நாளில் 6 மாவட்டங்களில் போராட்டம் இப்போராட்டத்துக்காவது தீர்வு எட்டுமா..?

காணாமற் போனோர் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளும் ஆணைக்குழுவின் விசாரணையை இடைநிறுத்தி, சர்வதேச விசாரணைக்குழு நியமிக்க கோரியும், காணாமற் போனோரின் விபரங்களை வெளியிடுமாறும் வலியுறுத்தி வடக்கு கிழக்கின் எட்டு மாவட்டங்களிலும் ஒரே நாளில் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

## யாழ்ப்பாணம் ஆர்ப்பாட்டம்



காணாமல் போன உறவுகளை மீட்டுத்தரக்கோரியும், போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணையை வலியுறுத்தியும் காணாமல் போனோரின் உறவினர்கள் கடந்த 23.03.2015 திங்கட்கிழமை யாழ்ப்பாணத்திலும் ஆர்ப்பாட்டம் ஒன்றினை முன்னெடுத்தனர்.

யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் இருந்து ஆரம்பமான ஊர்வலம் யாழ். மாவட்ட செயலகத்தை சென்றடைந்த பின்னர் அங்கு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டம் முற்பகல் 10.30 முதல் சுமார் 1 மணித்தியாலம் இடம்பெற்றது. கடத்தப்பட்டு காணாமல் போனோர், இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு காணாமல் போகச் செய்யப்பட்டோர், இராணுவத்தினரிடம் சரணடைந்த நிலையில் காணாமல்போகச் செய்யப்பட்டுள்ளோர் ஆகியோரின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுத்தனர்.

அன்றைய தினம் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள், எங்கே எமது பிள்ளைகள், காணாமல் போன உறவுகள் எங்கே, சர்வதேச விசாரணை வேண்டும் போன்ற கோரிக்கைகள் அடங்கிய சுலோக அட்டைகளை கைகளில் தாங்கியவாறு பெற்றோர்கள் கதறி அழுதக் காட்சிகள் அனைவர் மனங்களையும் உருகச் செய்தன.

## அம்பாறை ஆர்ப்பாட்டம்



அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த காணாமல் போனோரின் உறவினர்கள் கடந்த 23.03.2015 உறவுகளைத் தேடித்தருமாறு கோரி இரண்டு மௌன ஊர்வலங்களை ஆரம்பித்துள்ளனர்.

முதலாவது மௌன ஊர்வலம் கல்முனை மாநகர சபைக்கு முன்பாக இன்று காலை 9 மணிக்கு ஆரம்பித்துள்ளதோடு, மற்றைய ஊர்வலம் கல்முனையிலுள்ள பற்றிமா பாடசாலைக்கு முன்பாக ஆரம்பித்து.

அதேவேளை மௌன ஊர்வலங்களில் 500க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## மன்னார் ஆர்ப்பாட்டம்



இதேவேளை கடந்த 23.03.2015 காலை 9 மணிக்கு மன்னார் மாவட்ட செயலகத்தின் முன்னால் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த காணாமல் போனவர்களின் பெற்றோரும், உறவினர்களும் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு பட்டிருந்தனர்.

## வவுனியாவில் ஆர்ப்பாட்டம்



ஐ.நா அனுசரணையில் சர்வதேச விசாரணை வேண்டும் என வலியுறுத்தி வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

ஐ.நா அனுசரணையில் சர்வதேச விசாரணை வேண்டும் என வலியுறுத்தி வவுனியாவில் கடந்த 23.03.2015 ஆர்ப்பாட்டமொன்று வடக்கு கிழக்கு மாகாண சிவில் அமைப்புக்களின் ஒன்றியத்தினால் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

இதன்போது காணாமல்போனோர் தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழுவில் நம்பிக்கை இல்லை எனவும் சர்வதேச விசாரணையே தேவையெனவும் வலியுறுத்தப்பட்டிருந்தது.

வவுனியா பிரதேச செயலகத்திற்கு முன்பாக காலை 10 மணிக்கு ஆரம்பித்த ஆர்ப்பாட்டம் பின்னர் மன்னார் வீதி வழியாக யாழ் வீதியை வந்தடைந்து வவுனியா மாவட்ட செயலகத்தில் மகஜர் கையளிப்புடன் நிறைவடைந்திருந்தது.

இதன்போது கொலைகாரர்களிடமே நியாயமா?, ஏமாற்றும் உள்ளக விசாரணை வேண்டாம் ஐ.நா. அனுசரணையிலான விசாரணைக்குழுவே வேண்டும், கொலைகாரனிடம் நீதியை எதிர்பார்ப்பதா?,ஐ.நாவே இனப்பிரச்சனையில் தலையிடு, உள்ளக விசாரணை ஸ்ரீலங்கா அரசின் ஏமாற்று நாடகம் என்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை தாங்கியிருந்தனர்.

இந் நிலையில் மாவட்ட செயலகத்திற்கு சென்ற ஆர்ப்பாட்டகாரர்கள் வவுனியா அரசாங்க அதிபரிடம் மகஜரை கையளித்திருந்தனர்.

## கிளிநொச்சி ஆர்ப்பாட்டம்



கிளிநொச்சியில் காணாமல் போன உறவுகளால் கடந்த 23.03.2015 காலை கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

ஏமாற்ற விசாரணை வேண்டாம், ஐ.நா அனுசரணையிலான விசாரணையே வேண்டும் என கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

கிளிநொச்சி தொண்டமான் நகர் வைரவர் ஆலய முன்றலில் இருந்து காலை 10 மணியளவில் ஆரம்பமான அமைதி பேரணி ஏ9 வீதியூடாக கிளிநொச்சி மாவட்ட செயலகத்தினை வந்தடைந்தது.

அங்கு வருகை தந்திருந்த உறவுகள் ஜனாதிபதிக்கு கிடைக்கும் வகையில் அரசாங்க அதிபரிடம் மனு ஒன்றினை கையளித்தனர்.

## மட்டு நகரில் ஆர்ப்பாட்டம்



மட்டு நகரில் காணாமல் போனோரின் உறவுகள் உண்ணாவிரதம் பெருமளவு பெண்கள் பங்கேற்கேற்றனர்.

**இவ்வாறு காணாமல் போனோரின் உறவுகள் வடக்கு, கிழக்கில் ஒன்றிணைது ஒரே நாளில் 6 மாவட்டங்களில் போராட்டம் இப்போராட்டத்துக்காவது தீர்வு எட்டுமா..?**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## Ray of Hope People
## நம்பிக்கை ஒளி

G-05, No 10 Coutenay Road, East Lane Business Park, HA9 7ND Wembley, Brent
Phone 020 8617 9343 | Email roh@therog.org |
www.theroh.org | facebook.com/theroh.org

I would like to pay on the ☐ 1st ☐ 15th of the month. Please tick the appropriate box.
PLEASE FILL IN THE REST OF THE DONATION FORM BELOW.

Full Name :

Address:

Post Code :

Signature Date

To enable us to contact you more easily, Please complete details below:

Telephone Home : Mobile :

Email :

*Contact details will not be passed on to any other organisation either formally or informally

**GIFT AID DECLARATION:**

Thanks to the government's Gift Aid scheme, Ray of Hope can reclaim the tax you pay on all your appropriate donations increasing their value by almost a third at no extra cost to you. Please tick the appropriate box

☐ I am a UK taxpayer and I agree to Ray Of Hope claiming tax on all donations I make from today and during the four years prior to this date, Please treat me my donations as Gift Aid Donations, By ticking this form I confirm that I am paying or will pay an amount of income tax and/or capital gains tax to cover the amount ray Of Hope and any other charities or Community Amateur Sports Clubs will reclaim for the tax year (6th April one year to 5th April the next year) Council tax and VAT do not qualify towards Gift AID will reclaim 25p of tax on every £1 that has been given.

☐ I am not a UK tax payer.

I would like to make regular monthly gift of ☐ £2 ☐ other ......... to 'Ray of Hope People'

**RAY OF HOPE INSTRUCTION TO YOUR BANK OR BUILDING SOCIETY TO PAY BY DIRECT DEBIT**

Please Fill in whole form using a ink pen and send to Ray Of Hope, G05, Courtenay Road, East Lane, Business Park, Wembley, Middlesex, HA9 7ND

Name and full postal address of your bank or building society:

To: The Manager Bank/building society
Address:

Postcode

Name(s) of account holder(s)

Bank/building society account number

Branch sort code

**Instruction to your bank or building society**
Please pay to **Barclays Bank plc, Leicester, LE87 2BB** for the credit of **Ray of Hope People** (A/c No 43641341, Sort Code 20-92-60)
The sum of £2 or other £____ (____________ in words monthly*, on the _____ day of the month, with the first payment being on ____/____/____ until further notice. (*delete & initial inappropriate words)

Signature Date

Banks and Building society may not accept Direct Debit instructions for some types of accounts.

### "LET'S ENLIGHTEN THE LIVES OF THE SUFFERED"
**Donate £2 a month to change the future !**

After 30 years long brutal civil war , Tamils in Northern Sri Lanka continue to suffer for their basic needs. War has taken everything from them. Tamil Children possibly the biggest victims of this war as they are bearing the brunt of the violence, living in fear and desperation.

Their Homes and Schools are still lack the roof and their future is under threat.

Help us to provide them with required medical assistance
Help us to open their schools to brighten their future!
Help us to rebuild the economy of their land !

Donate to the Ray Of Hope's '£2 a month' appeal to help rebuild the lives that have been destroyed and abandoned.
That's your duty to help the suffered !

*Rebuild the nation , by rehabilitating family by family !*



### துவண்டோர் துயர்துடைத்து ஒளி ஏற்றுவோம்
மாதாந்தம் இரண்டு பவுண்டுகள் கொடுத்து உதவிடுவீர்!

தாயக மண்ணில் பாரிய போர் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டு தமது வாழ்வாதாரங்களை தொலைத்து அல்லலுறும் எம் சொந்தங்களைக்காத்து அவர்கள் தலை நிமிர்ந்து வாழ வழிசெய்வோம் உறவுகளே வாரீர்!

ஒருவேளை உணவை உறுதிப்படுத்துவதற்கு!
அடிப்படை மருத்துவ தேவையை உறுதிப்படுத்துவதற்கு!
சிறார்களின் கல்வி மேம்பாட்டினை வளப்படுத்துவதற்கு!
அழிந்துபோன எம் இனத்தின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு!
வாரீர் கைகொடுப்பீர்!

வாழ வைப்போம் எமது மக்களை ! இது எம் கடமை !
ஒவ்வொரு குடும்பமாய் எமது தேசத்தை வளர்த்தெடுப்போம் !

Design & Printed by inayam.co.uk


### ஊர்க்கதைகள் கூறும் படங்கள்















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org